<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லாவரம்</u>

**<u>அசல் வழக்கு எண். 580/2023</u>**

2026 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 08 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய 1–வது நபரின் வாக்குமூலம் 1896–ஆம் ஆண்டு 44வது விதியின் ஏற்பாட்டின் திரு.சி.ப.முல்லைவாணன்,பி.ஏ.,பி.எல்., (Hons) மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நீதிபதி, பல்லாவரம் ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | உமா மகேஷ்வரி |
| த/பெ, க/பெ | : | லோகநாதன் |
| வயது | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |

**<u>முதல் விசாரணை – வா.சா. 1</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இத்துடன் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இதில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லிதான் தட்டச்சு செய்யப்பட்டதுதான்.

| | |
|---|---|
| **வா.சா.ஆ.1** | 19.09.2015 தேதியிட்ட கடன் விண்ணப்பம் அசல். |
| **வா.சா.ஆ.2** | 19.09.2015 தேதியிட்ட சொத்து மற்றும் கடன் தொடர்பான விபர பட்டியல் அசல். |
| **வா.சா.ஆ.3** | 23.10.2015 தேதியிட்ட கடன் அனுமதி உத்தரவு அசல். |
| **வா.சா.ஆ.4** | 23.10.2015 தேதியிட்ட கடன் உறுதி சீட்டு அசல். |
| **வா.சா.ஆ.5** | 23.10.2015 தேதியிட்ட ஒப்பந்த பத்திரம் அசல். |
| **வா.சா.ஆ.6** | 11.07.2018 தேதியிட்ட முன்கடன் ஒப்புகை இரசீது அசல். |
| **வா.சா.ஆ.7** | 17.05.2019 தேதியிட்ட கணக்கு பட்டியல் சான்றிட்ட நகல். |
| **வா.சா.ஆ.8** | 20.05.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |

| | |
|---|---|
| **வா.சா.ஆ.9** | திருப்பப்பட்ட அஞ்சல் உறை அசல். |
| **வா.சா.ஆ.10** | 06.05.2026 தேதியிட்ட பணியிட மாறுதல் உத்தரவு மற்றும் அடையாள அட்டை உண்மை நகல். |

தாவாப்படி தீர்ப்பு வழங்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**முதல் விசாரணை முழுவதுமாக முடிவுற்றது.**

<u>**குறுக்கு விசாரணை –** இல்லை.</u>

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**

District Munsif–cum Judicial Magistrate,

Pallavaram